## October 8, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. இந்தியப் பெருங்கடலில் செவ்வாய்க்கிழமை 'எக்சர்ஸைஸ் கொங்கண்' என்னும் கூட்டுப் பயிற்சி மேற்கொண்ட இந்திய-பிரிட்டன் கடற்படை கப்பல்கள்.
2. நிகழாண்டில் உள்நாட்டு நிறுவனங்க ளிடமிருந்து ரூ.1.20 லட்சம் கோடிக்கு ராணுவத் தளவாடங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது என்று பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.
    i. புது தில்லியில் நடைபெற்ற பாதுகாப்புத் துறை நிகழ்ச்சியில் பேசிய அவர், 'மாறி வரும் போர்க்களச் சூழலைக் கருததில் கொண்டு மத்திய அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. தொடர்பு இல்லாநிலை தாக்குதல் நடத்தப்படும் இந்தச் குழலில் ட்ரோன்களின் பயன்பாடு முக்கியத்துவம் பெற்றுள்ளது.
    ii. ஆகையால், பாதுகாப்பு சவால்களை எதிர்கொள்ள உள்நாட்டு ராணுவத் தளவாட தயாரிப்பு நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளன.
    iii. கடந்த 2021-22ஆம் ஆண்டு உள்நாட்டு நிறுவனங்களிடம் இருந்து ரூ.74 ஆயிரம் கோடிக்கு ராணுவத் தளவாட கொள்முதல் நடைபெற்றது. இது 2024–25-ஆம் ஆண்டில் ரூ.1.20 லட்சம் கோடி வரையில் அதிகரித்துள்ளது.
3. பிரிட்டன் பிரதமர் கியர் ஸ்டார்மர் இரண்டு நாள் அரசுமுறைப் பயணமாக புதன்கிழமை (அக். 8) இந்தியா வருகிறார்.
    i. பயணத்தின்போது பிரதமர் நரேந்திர மோடியைச் சந்திக்கும் அவர், பல்வேறு துறைகளில் இருதரப்பு உறவை மேம்படுத்துவது குறித்தும், பிராந்திய மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்தும் ஆலோசனை மேற்கொள்கிறார். பிரிட்டன் பிரதமராக கியர் ஸ்டார்மர் பதவியேற்ற பின்னர் அவர் மேற்கொள்ளும் முதல் இந்தியப் பயணம் இதுவாகும்.
    ii. கியர் ஸ்டார்மரை வியாழக்கிழமை சந்திக்கும் பிரதமர் மோடி வர்த் தகம், முதலீடு, தொழில்நுட்பம் உள்பட பல்வேறு துறைகளில் இருத ரப்பு உறவை மேம்படுத்துவது குறித்தும், பிராந்திய மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்தும் ஆலோசிக்கவுள்ளார். அப்போது இந்தியா-பி ரிட்டன் இடையேயான விரிவான பொருளாதார மற்றும் வர்த்தக ஒப் பந்தம் (சிஇடிஏ), 'தொலைநோக்குத் திட்டம் 2035', தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் (எஃப்டிஏ) குறித்தும் இருவரும் விவாதிக்கவுள்ளனர்.
4. சாலைகளில் பாதசாரிகளின் நடமாட்டம் மற்றும் மிதிவண்டி உள்ளிட்ட மோட்டார் அல்லாத வாகனங்களின் இயக்கத்துக்கான பாதுகாப்பு விதிமுறைகளை 6 மாதங்களுக்குள் வகுக்க வேண்டும் என்று அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
    i. நெடுஞ்சாலைகள் அல்லாத பிற சாலைகளுக்கான வடிவமைப்பு, கட்டுமானம், பராமரிப்புக்கான தரக் கட்டுப்பாட்டு விதிமுறைகளை வகுக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது.
    ii. இந்தியாவில் சாலை விபத்துகள் அதிக ரித்து வருவதைக் குறிப்பிட்டு, கோவையைச் சேர்ந்த அறுவை சிகிச்சை நிபுணர் எஸ்.ராஜ சேகரன் தாக்கல் செய்த மனு மீது நீதிபதிகள் ஜே.பி.பார்திவாலா, கே.வி.விஸ்வநாதன் ஆகியோர் மேற்கண்ட உத்தரவை பிறப்பித்துள்ளனர்.
    iii. 'இந்தியாவில் சாலை விபத்துகளைத் தடுக்க ஒரே சீரான, ஒருங்கிணைந்த கொள்கை அவசியம்; இந்த விஷயத்தில், மாநில அரசுகளுடன் ஒருங்கிணைந்து, மத்திய சாலைப் போக்குவரத்து அமைச்சகம் செயல்திறன்மிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தரவிட வேண்டும்' என்று மனுவில் கோரப்பட்டது.

iv. இம்மனு மீது உத்தரவு பிறப்பித்த நீதிபதிகள், 'தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் பொது இடங்களில் மோட்டார் அல்லாத வாகனங்களின் அணுகல்-இயக்கம், பாதசாரிகளின் நடமாட்டத்தை ஒழுங்குபடுத்துவதற்கு கடந்த 1988-ஆம் ஆண்டின் மோட்டார் வாகன சட்டப் பிரிவு 138 (1ஏ)-இன்கீழ் பாதுகாப்பு விதிமுறைகளை மாநிலங்கள் இதுவரை வகுக்கவில்லை என்றால், அடுத்த 6 மாதங்களுக்குள் வகுக்க வேண்டும்.

v. இதேபோல், 21டி பிரிவின்கீழ் தேசிய நெடுஞ்சாலைகள் அல்லாத நெடுஞ்சாலைகளின் வடிவமைப்பு, கட்டுமானம், பராமரிப்புக்கான தரக்கட்டுப்பாட்டு விதிமுறைகளையும் இதே காலகட்டத்துக்குள் வகுக்க வேண்டும்' என்று உத்தரவிட்டனர்.

5. பேரவையில் தமிழ் சிறுபான்மையினருக்கு ஜாதிச் சான்றிதழ் வழங்கும் விதிகள் தொடர்பாக எம்எல்ஏ ஏ.ராஜா எழுப்பிய கேள்விக்கு பினராயி விஜயன் அளித்த பதிலில், 'தற்போதைய விதிகளின்படி 1950-க்கு முன்பாக பிற மாநிலங்களில் இருந்து கேரளத்துக்கு புலம் பெயர்ந்து நிரந்தரமாகத் தங்கிய தமிழ் மொழி சிறுபான்மையினருக்கு ஜாதிச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

   i. 1950-க்குப் பதில் 1970, ஜன. 1-க்கு முன்பாக கேரளம் வந்த தமிழ் மொழி சிறுபான்மையினருக்கு ஜாதிச் சான்றிதழ் வழங்க நடுவட்டம் கோபாலகிருஷ்ணன் குழு பரிந்துரை அளித்தது. இதை அமல்படுத்த விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. குறிப்பாக, புலம்பெயர்வு தொடர்பான விவகாரங்கள் மத்தியப் பட்டியலில் இடம்பெற்றுள்ளதால், அதில் மத்திய அரசே திருத்தங்கள் செய்ய முடியும். எனவே, இந்த விவகாரம் குறித்து மத்திய அரசின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்படும்' என்றார்.

6. தமிழகத்தில் டெங்கு காய்ச்சலுக்கு நிகழாண் டில் 15,796 பேர் பாதிக்கப்பட் டுள்ளதாகவும், 8 பேர் உயிரிழந் ததாகவும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரம ணியன் தெரிவித்தார்.

   i. மழைக் காலங்களில் வீடுகளைச் சுற்றி தேங்கி இருக்கும் மழை நீரினால் கொசுக்கள் உற்பத்தி ஆகிறது.

   ii. ஏடிஸ் எஜிப்டை என்ற கொசுக்களை ஒழிப்பதற்காக பல்துறைக் குழுவினர் ஒருங்கிணைந்து வீடு வீடாகச் சென்று மழைநீர் தேங்கி இருக்கும் பகுதிகளைக் கண்டறிந்து தூய்மைப் படுத்தி வருகிறார்கள்.

   iii. கொசு மருந்து அடித்தல், மருந்து தெளித்தல் போன்ற பல்வேறு பணிகளை சம்பந்தப்பட்ட துறைகள் செய்து வருகின்றனர்.

7. 2025-26 நிதியாண்டில் இந்திய பொருளாதார வளர்ச்சி 6.3 சதவீதமாக இருக்கும் என்று உலக வங்கி கணித்திருந்த நிலையில், இப்போது அது 6.5 சதவீதமாக இருக்கும் என்று உயர்த்தி அறிவித்துள்ளது.

   i. 'இந்தியா தொடர்ந்து வேகமாக வளரும் பொருளாதாரத்தைக் கொண்ட நாடாகத் திகழும். இந்தியாவில் உள்நாட்டு நுகர்வு தொடர்ந்து சீராக அதிகரித்து வருவது மிகவும் சாதகமான அம்சமாக உள்ளது. அதே நேரத்தில் அமெரிக்கா விதித்துள்ள 50 சதவீத வரியின் தாக்கம் அடுத்த நிதியாண்டில் இந்திய பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்த வாய்ப்புள்ளது' என உலக வங்கி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

   ii. எனவே, 2026-27 நிதியாண்டில் முன்பு கணித்த 6.5 சதவீதத்துக்கு பதிலாக 6.3 சதவீதமாக இந்திய பொருளாதார வளர்ச்சி குறைய வாய்ப்புள்ளதாகக் கணித்துள்ளது.

8. மத்திய பிரதேசத்தில் இருமல் மருந்து உட்கொண்டதால் குழந்தைகள் உயிரிழந்தது தொடர்பாக சிபிஐ விசாரணை கோரியும், மருந்துகள் பாதுகாப்பு முறையில்

*சீர்திருத்தங்கள் கோரியும் உச்சநீ திமன்றத்தில் பொதுநல மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.*

i. *நச்சுத் தன்மையுள்ள ரசாயனம் கலந்த இருமல் மருந்தால், மத்திய பிரதேசத்தில் குழந்தைகள் உயிரிழந்ததாக கூறப்படும் சம்பவத்தைத் தொடர்ந்து அந்த குறிப்பிட்ட மருந்துகளை பல்வேறு மாநில அரசுகள் தடை செய்துள்ளதுடன், குழந்தைகளுக்கு மருந்துகள் வழங்குவது தொடர்பான கட்டுப்பாடுகளையும் விதித்துள்ளன. மத்திய பிரதேசத்தில் சுகாதாரத் துறை அதிகாரிகள் சிலர் பணியிடைநீக்கம் செய்யப்பட்டனர்.*